

பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்க தலைவருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சிராப்பள்ளி மணப்பாறை சிப்காட் வளாகத்தில் பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி (JAMBOREE) மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பெருந்திரளணி விழா 28.01.2025அன்று முதல் 03.02.2025 வரை நடைபெறுவதை முன்னிட்டு அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேற்று முன்தினம் (19.01.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை சிறப்பாகவும், விரைவாகவும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

### திருச்சி மணப்பாறை சிப்காட் வளாகத்தில் - ஜன. 28 முதல் பிப். 3 வரை

# பாரத சாரண சாரணியர் வைர விழா - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## விழாப் பணிகளை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பார்வையிட்டு ஆய்வு!

திருச்சி, ஜன. 21- பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்க தலைவருமான அன்பில் மகேஸ் பொய்யா மொழி திருச்சிராப்பள்ளி மணப்பாறை சிப்காட் வளாகத்தில் பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி (JAMBOREE) மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பெருந்திரளணி விழா 28.01.2025அன்று முதல் 03.02.2025 வரை நடைபெறுவதை முன்னிட்டு அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேற்று முன்தினம் (19.01.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை சிறப்பாகவும், விரைவாகவும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

பாரத சாரண சாரணியர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு 75 ஆண்டுகள் முடிவடைவதை முன்னிட்டு வைரவிழா தேசிய திரளணியாகவும். (Dimanon Jubilee National Jamboree) முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு விழா நடைபெறவுள்ளது. அதனடிப்படையில், பாரத சாரண சாரணியர் இயக்க, தேசிய தலைமையகத்தின் அனுமதியோடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் ஆலோசனைகளின் படி திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் வருகின்ற 28.01.2025 முதல் 03.02.2025 வரை பாரத சாரண சாரணியர் இயக்க வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பெருந்திரளணி (Special Jamboree) மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு, இந்தியாவின் அனைத்து மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு தங்கள் கலாச்சாரம், பண்பாடு குறித்த செயல்பாடுகளை நிகழ்த்திக் காட்ட உள்ளனர். இந் நிகழ்வில் சாரணர்கள் தங்குவதற்காக 1000 கூடாரங்கள், சாரணியர்கள் தங்குவதற்காக 900 கூடாரங்கள். திரிசாரண சாரணியர்கள் தங்குவதற்காக 450 கூடாரங்கள், ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்கள் தங்குவதற்காக 40 கூடாரங்கள், அலுவலகப்பணிக்காக 32 கூடாரங்கள் என மொத்தம் 2,422க்கும் மேற்பட்ட கூடாரங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் 2000 க்கும் மேற்பட்ட குளியல் அறைகள் மற்றும் கழிவறைகள் அமைக்கப்பட்டு வரும் பணிகளையும், இந்த கூடாரத்தில் தங்குவதற்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் மற்றும் மின்சாரம் வழங்குவது உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருவதையும், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு, பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து இந்நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு அவர்களின் உணவு முறைக்கு ஏற்றார்போல் உணவு தயாரித்து வழங்கிடும் வகையில் 72 சமையல் செய்யும் கூடங்கள் மற்றும் 30 க்கும் மேற்பட்ட உணவு அருந்தும் கூடங்கள் அமைக்கப்பட்டு வருவதையும் இந்த விழா நடைபெறும் வளாகத்தின் அனைத்துப் பகுதிகளையும் கண்காணிக்கும் வகையில் 350 க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கும் வகையில் கண்காணிப்பு அறை அமைக்கப்பட்டு வருவதையும், சாரண சாரணியர்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கிடும் வகையில் பல்வேறு பொருட்கள் பால், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப்பொருட்கள் விற்பனை செய்யும் வகையில் 50 க்கும் மேற்பட்ட கடைகளுடன் கூடிய மார்க்கெட் பகுதி அமைக்கப்பட்டு வருவதையும், அனைத்துப் பகுதிகளுக்கும் தடையில்லாமல் மின்சாரம் வழங்கிடும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் தேவைக்கேற்றார்போல் பயன்படுத்திடும் வகையில் ஜெனரேட்டர் வசதி அமைக்கப்பட்டுள்ளதையும் மேலும் 25 படுக்கை வசதிகளுடன் கூடிய 2 மருத்துவமனைகள் மற்றும் 15 நடமாடும் மருத்துவ வாகனங்கள், அவசர உதவிக்காக 15 ஆம்புலன்ஸ் வாகனங்களும் விழா நடைபெறும் வளாகத்தில் அமைப்பதற்கான பணிகளையும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் சார்பில் தேவையான இடங்களில் தீயணைப்பு வாகனங்களையும், தீயணைப்பு கருவிகளும் வைக்கப்படவுள்ள இடங்களையும் நேற்று முன்தினம் (19.01.2025) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் / தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்க தலைவருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை சிறப்பாக மேற்கொள்ள ஆலோசனை வழங்கினார்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் / தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்க தலைவருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தெரிவித்தாவது :

சாரண சாரணியர் ஜாம்புரி நிகழ்வு நடைபெறும் வளாகத்தில் இயற்கை பேரிடரில் இருந்து மாணவ மாணவிகள் எவ்வாறு தங்களை தற்காத்துக் கொள்வது பற்றிய பயிற்சி வழங்கப்பட இருக்கிறது. மேலும் துப்பாக்கி சுடுதல் உள்ளிட்ட பயிற்சி அளிப்பதற்கான தலங்களும் உருவாக்கப்பட இருக்கிறது. மேலும் பல்வேறு மாநிலங்களில் இருந்து வருகைதர உள்ள மாணவ, மாணவியர்களின் கலை மற்றும் கலாச்சாரம் சார்ந்த நிகழ்வுகள் அரங்கேற இருக்கின்றன. அரங்குகளில் தமிழ்நாடு மொழி கலாச்சாரம் பண்பாடு குறித்த சொற்பொழிவு பேச்சாளர்களைக் கொண்டு சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. கலைஞர் பெயரில் இந்த ஜாம்புரி நிகழ்வு நடைபெறுவதால் தமிழகத்திற்கு அவர் செய்த சாதனைகளை விளக்கிடும் வகையில் கண்காட்சி அரங்கம் அமைய இருக்கிறது. பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த மாணவ மாணவியர் வருவதால் பாதுகாப்பு காரணங்கள் கருதி இந்நிகழ்விற்கு பொதுமக்கள் ஒரு குறிப்பிட்ட எல்லை வரை அனுமதிக்கப்பட இருக்கிறார்கள்.

இந்நிகழ்விற்கு மத்திய அமைச்சர்கள், பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது அவர்களை வரவேற்பதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம். மாணவ மாணவியர் தனித் தனியாக தங்குவதற்கு அவர்களுக்குரிய கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்குத் தேவையான உணவு தண்ணீர கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் மிகச் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாநில முதன்மை பேராணையர் பாரத சாரண சாரணியர் இயக்கம் பெருந்திரளணி பொறுப்பாளர் திரு.அறிவொளி, மாநில கல்வி இயக்குநர் திரு.பழனிச்சாமி, சாரணர் இயக்க தேசிய ஆலோசகர் ராஜ்குமார் கௌசிக், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. கங்காதாரிணி உள்ளிட்ட அரசுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் கெங்கவல்லி பேரூர் கழகச் செயலாளர் சு.பாலமுருகன் ஏற்பாட்டில் புதிய தமிழகம் கட்சியின் முன்னாள் நகரச் செயலாளர் நாவன் அக்கட்சியில் இருந்து விலகி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். அப்போது மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பிரகாஷ், பாலசுப்பிரமணியம், ராஜேந்திரன், சபரிநாத், மனோஜ், மகேந்திரன் உடனிருந்தனர்.



பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா திருமயம் ஒன்றிய திமுக சார்பில் திருமயம் பேரூர் பகுதிகளில் கழகக் கொடியேற்றும் நிகழ்ச்சி மற்றும் பெரியார் நினைவு சமத்துவபுரம் ஒன்றிய திமுக அலுவலகம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கழக கொடியினை ஏற்றி வைத்து மற்றும் சமத்துவப் பொங்கலிட்டு சிறப்பித்தார்கள். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் ஆறு. சிதம்பரம், இரா. கனேசன், அணி அமைப்பாளர்கள் இரா.மேகநாதன், தேவி, கே.ஆர்.ராமசாமி, சுப.துரைராஜா, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பிக்கும் வகையில், கரூர் அரசு காலனி அருகில், பெரிய குதிரை, சிறிய குதிரை மற்றும் புதிய குதிரை என மூன்று பிரிவுகளில் மாபெரும் குதிரை எல்கை பந்தயம் கரூர் மாவட்ட கழகம் சார்பில் நடைபெற்றது. வெற்றி பெற்ற குதிரைகளின் உரிமையாளர்களுக்கு மாவட்ட கழக செயலாளர், மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கோப்பையுடன் பரிசுத்தொகையும் வழங்கினார். அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாமசுந்தரி, மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் ஆயிரக்கணக்கானோர் கண்டு களித்தனர்.

### அமிர்த விஜயகுமார் வரவேற்புரை! செம்பனார்கோயில் மத்திய

# ஒன்றிய பாகநிலை முகவர்கள், பூத்கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. – மன்னை த.சோழராஜன் சிறப்புரை!

மயிலாடுதுறை, ஜன. 21 - மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய தி.மு.க. பாக நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) கலந்தாய்வுக் கூட்டம் திருக்கடையூர் தனலெட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செம்பனார்கோயில் மத்திய ஒன்றியச் செயலாளர் அமிர்த. விஜயகுமார் வரவேற்றார். ஒன்றிய நிர்வாகிகள் அவைத்தலைவர் எஸ். கோபால், மாவட்ட பிரதிநிதிகள் எம்.மணிமாறன், கோ.தொட்சிணாமூர்த்தி, எம்.சிவக்குமார், துணைச் செயலாளர்கள் பா.கணேசன், க.சங்கர், சாந்திவேல் முருகன், ஜி.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் பூம்புகார் சட்ட மன்ற தொகுதி பார்வையாளரும், மாநில மாணவர் அணி துணைச் செயலாளருமான மன்னை த.சோழராஜன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.அப்துல்மாலிக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜெ.கபிலன், நத்தம் வின்சென்ட், ஹர்சத், மாவட்ட சிறுபாண்மை அணி அமைப்பாளர் எஸ்.எம்.சம்சுதீன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வைத்தியநாதன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் காஞ்சனாமாலாசேகர், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.பிரபு, மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் தங்கராஜா, மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் திருமூர்த்தி, மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் குமார், மற்றும் சிவராஜ், உதயக்குமார், கலியபொருமாள் மற்றும் ஒன்றிய, கிளை நிர்வாகி கள், பாக நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) கலந்து கொண்டனர்.

முடிவில் ஒன்றிய குழு முன்னாள் துணைத்தலைவர் பி.பாஸ்கர் நன்றி கூறினார்.

### இரா.மாரிமுத்து தலைமை! நாகை நகரத்தில்

# துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

## என்.கௌதமன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி - தினேஷ்பாபு சிறப்புரை!

நாகை, ஜன. 21 - நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணைமுதலமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நாகை அபிராமி அம்மன் திருவாசலில் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவருமான இரா.மாரிமுத்து தலைமை தாங்கினார். மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், பொதுக்குழு உறுப்பினர் கே.பாண்டியன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.முருகையன், மாவட்ட பிரதிநிதி ஆர். ரமணி, நகர துணைச் செயலாளர்கள் பி.திலகர், சித்திராகுலோத்துங்கன், பொருளாளர் அபுபக்கர், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன் வரவேற்றார்.

கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், தலைமைக் கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, இளம்பேச்சாளர் தினேஷ் பாபு, மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, ஆர்.ஆர்.குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், சி.முகுந்தன், பி.முருகானந்தம், எம்.தினேஷ்குமார், எஸ்.வெற்றிச் செல்வன், எஸ்.பாலமுரளி, வ.கமல், தொ.மு.ச. சோ.காந்தி, மற்றும் மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள், நாகை நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு கழக கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகன், நகர சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் நகர துணைச் செயலாளர் வெற்றிலை கடை சிவா நன்றி கூறினார்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் வி. ஜெட்டிஅள்ளியில் தருமபுரி மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் ஒன்றிய செயலாளர் டி.எல்.காவேரி ஏற்பாட்டில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமை வகித்தார். தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளரும்,தருமபுரி சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான ஏ.கே.தருண் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் வாக்கு சாவடி முகவர்கள் நியமனம், வரும் 2026ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் மற்றும் கட்சியின் ஆக்கப் பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி,ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ், பொருளாளர் தண்டபாணி உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.